Enrich, XI(I): 4 - 7, July – Dec, 2019

# பெண்கள் வேரல்ல விதைகள்

ர.செல்வ லதா, தமிழ்த்துறை
ஏ.பி.சி மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி

**முன்னுரை**

கவிஞரின் பார்வையில் பாதாதிகேச கேசாதிபாத வர்ணணை, கணவனின் பார்வையில் எனக்குள் அவள் அடக்கம், கடவுளின் பார்வையில் அவள் இணை துணை. அடங்கியவளாக, வர்ணிப்பாக இரண்டாம் பட்சமாக ஆகிப்போனவள் பெண். அப்படிடப்பட்ட பெண் விதையாக நசுக்கப்பட்டும் உயிர்ப்பிக்கப்பட்டும் காட்சியளிக்கிறாள் என்பதை வெளிப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**பெண்களின் நிலை**

ஒரு காலத்தில் தாய்வழிச்சமூகமாக இத்தரணியில் வாழ்ந்த பெண்ணினம், தடை பலகண்டு முடக்கப்பட்டு அடிமை வாழ்வை வாழ்ந்ததாக வரலாறு கூறுகிறது. தற்போதைய நிலை ஆணும் பெண்ணும் சமம். பெண் சம நிலையிலும் ஒருபடி மேல் என்றும் கூறுகின்றனர். உரிமை, சுதந்திரம் எல்லாம் பெண்ணுக்கு அளிக்கப்படுகிறது என்று முன்நிலையை ஒப்பிட்டு பெண்கள் தங்களை ஆற்றிக் கொள்கின்றனர். ஆனால் பெண் நிலை என்னவென்று ஒவ்வொரு பெண்ணிடமும் கேட்டால் உண்மைநிலை புரியும்.

**“அப்பொழுது அடிமையானோம்**
**இப்பொழுது சரி சமமானோம்**
**எப்பொழுது விடுதலையாவோம்!**

என்ற ஏகோபித்த குரல் எங்கும் ஒலிப்பதை அறியமுடிகிறது. உரிமை என்ற பெயரில் கல்வியையும் வேலைவாய்ப்பையும் கொடுத்து விட்டு அதன் பலனை அனுபவிக்கத் தடை விதிக்கின்றனர். மனம் என்ற ஒன்று அவளுக்கு உண்டு என்பதை மறந்து விடுகின்றனர் சில மனமற்ற ஆண்கள்!

**புதுமைப் பெண்ணின் மனப்பேராட்டம்**

பல ஆண்டுகளுக்கு முன் நாளேடு ஒன்றின் இலவச இணைப்பில் இடம்பெற்ற வாசகர்குரல் பகுதியில் பெயர் வெளியிட விரும்பாத வாசகியின் குரல் பெண்ணின் மனப்போராட்டத்தை பதிவு செய்கிறது.

நான் படித்து வேலைபார்க்கும் துணிவான பெண். பாரதி கண்ட புதுமைப்பெண் என எண்ணி அகமகிழ்வேன். ஒருநாள் வேலைக்குச் செல்வதற்கு பேருந்து நிலையத்திற்கு நடந்து சென்று கொண்டிருந்தேன். குறுகிய பாதை வழியே காலைப் பொழுதை கடந்து செல்லும்போது வலதுபுறம் திரும்பி பையைத் திறந்து பேருந்து கட்டணத்தை எடுத்து கையில் வைத்து கொள்வோம் என எண்ணிய வேளையில் ........ என் உடலிலிருந்து உறுப்பு ஒன்றை பிடுங்கி எடுப்பதை போன்ற வலி வேதனையை உணர்ந்தேன். என்ன நடக்கிறது என்று அறிவு தடுமாறும் நிலையில், என் முன்னால் சலனமில்லாமல் சைக்கிளில் ஒருவன் ஒரு பக்கம் திரும்பி ஓரப் பார்வையில் கடந்து சென்றான். முன்னும் பின்னும் சாலையில் வேறு ஒருவரும் இல்லாத நிலையில், அவனின் செயல் இது என்று ஊகிக்க மட்டும் முடிந்தது. நாயே, செத்த நாயே இதுவெல்லாம் ஒரு பிழைப்பு என்று மனம் ஏசினாலும் உடல் கூசியது. ஓடிப்போய் யாராவது வந்தால் சொல்லலாம் என்று எண்ணும் வேளையில் இதை யாரிடம் சொல்ல முடியும்? நியாயம் உண்டா? இதனால் நமக்குதான் அவமானம் என்று மனம் அழுததே தவிர உதடு திறக்கவில்லை. பாரதிகண்ட புதுமைப்பெண்ணின் மனம் சிறைப்பட்டது. இப்படி எத்தனையோ பெண்கள் தனிமையில் ஆண்களின் செயலால் கண்ணீர் வடிக்கும் நிலை நம் நாட்டில் உள்ளது. இந்நிலை மாற வேண்டும் என்றால் இப்படிப்பட்ட ஒவ்வொரு ஆணும் மாற வேண்டும்.

**“அவர்கள் பார்வையில்**
**எனக்கு முகம் இல்லை**
**இதயம் இல்லை**
**ஆத்மாவும் இல்லை**

**அவர்களின் பார்வையில்**
**இரண்டு மார்புகள்**
**நீண்ட கூந்தல்**
**சிறிய இடை**
**பருத்த தொடை**
**இவைகளே உள்ளன"**

- அ.சங்கரி (சொல்லாத சேதிகள்) பெண் வரலாறு அறிவோம் (பெண் இன்று, பிப்: 16.2020., ப.11)

என்ற வரிகள் பெண்பற்றிய ஆணின் பார்வையைப் பதிவு செய்கிறது.

குடும்பத்தில் தாய், தந்தை தன் ஆண்பிள்ளைகளுக்கு பெண்ணை மதிக்கவும், உதவி செய்யவும், அன்பு செய்யவும் கற்றுக் கொடுக்க வேண்டும். கல்வி கற்றுக் கொடுக்கும் வகுப்பறை இதை கற்றுக் கொடுக்க வேண்டும். 'திருடனாய் பார்த்து திருந்தாவிட்டல் திருட்டை ஒழிக்க முடியாது' என்பது போல் தனிமனிதன் ஒருவன் பெண்ணை மதிக்கவும், உரிமை, சுதந்திரம் கொடுக்கவும் நினைத்தால் மட்டுமே இது சாத்தியம்.

**வாழ்வில் மாற்றம் கண்ட பெண்கள்**

கொல்கத்தாவில் பிறந்த மஹிமா மொய்த்ரா, மேற்கு வங்கத்தின் கிருஷ்ணா நகர் தொகுதியிலிருந்து நாடாளுமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர். 18 வயதில் அரசியலில் ஆர்வம் ஏற்பட்டு அதற்கான நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தவர். வங்கியின் துணைத்தலைவராக பணியாற்றினாலும் பணியைத் துறந்து 2009ல் காங்கிரஸ் கட்சியில் இணைந்தார். தற்போது நடைபெற்ற நாடாளுமன்றத்தில் தன் முதல் பேச்சில் ஏழு முக்கிய அம்சங்களை சுட்டிக்காட்டினார். இவரது பேச்சுக்கு வாழ்த்தும், விமர்சனமும் எழுந்தன. தன் ஆசை, இலட்சியத்தை அடைந்து சமூகமாற்றம் காண அரசியல் களம் கண்டவர் இவர். (பெண் இன்று, 21.09.2019இ ப.7) பெண்கள் அரசியலில் ஈடுபட்டால் மட்டும் போதாது, கருத்துக்களை துணிவுடன் எடுத்துரைக்கும் மனஉறுதி, திட்டங்களை செயல்படுத்தும் தன்னம்பிக்கை இருக்க வேண்டும்.

**"கடைத்தோன்றி கடைக் கங்குலான்**
**பலர் துஞ்சவும் தான் துஞ்சான்**
**உலகு காக்கும் உயர் கொள்கை" (புறம், 400)**

நாட்டு மக்களைத் துஞ்சாது பாதுகாத்த சோழன் நலங்கிள்ளியை இப்பாடல் புகழ்கிறது. சமுதாயப் பணியில் ஈடுபட அரசியல் களம் கண்ட இப்பெண்ணும் போற்றுதலுக்கு உரியவரே.

காஞ்சிபுரம் மாவட்டம் வாலாஜாபாத்தை சேர்ந்தவர் ராஜ்குமார், சொந்த ஊரில் பள்ளிக்கல்வி, பத்மஸ்ரீ நர்சிங் கல்லூரியில் பி.எஸ்.சி நர்சிங் பயின்றுள்ளார். பள்ளிப் பருவத்திலேயே தான் யார் என்பதை அடையாளம் கண்டாலும் சமூகக் கிண்டலுக்கும், கேலிக்கும் பயந்து மறைத்து வந்தவர், ஒரு சூழ்நிலையில் தன்னைத் திருநங்கை என அறிமுகம் செய்து கொண்டார் குடும்பம் சமூகத்தில் ஏற்பட்ட பலவித பிரச்சனைகளையும் சந்தித்து ரக்ஷிகா ராஜ் ஆனார். குடும்பம் விட்டு வெளியேறி நர்சிங் படிக்கும் போது பொருளாதார சிக்கலைச் சமாளிக்கத் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தில் பகுதி நேர ஊழியராக இணைந்தும் கலைக் குழுவினருடன் இணைந்து அதில் கிடைத்த வருமானத்தில் கல்லூரிப் படிப்பை முடித்தார். படிச்சு பட்டம் வாங்கிட்டேனே தவிர இன்னும் எனக்கு பதிவு எண் கிடைக்கவில்லை. திருநங்கை என்கிற காரணத்தால் என்னை ரொம்ப நாளாக அலைய விடுறாங்க. அதனால் மேல்படிப்பும் படிக்க முடியல எங்கேயும் வேலையும் செய்ய முடியாது என்று வருத்தப்படும் இவர் இந்தியாவின் முதல் திருநங்கை செவிலியாக சிறப்பு பெறுகிறார். கேலி கிண்டலுக்கு ஆளானாலும் கல்வி கற்றதால் சிறப்பு பெற்றார் இப்பெண். (பெண் இன்று, 21.07.2019 இப3)கல்வித் தீ அவ்வுயிருக்குள் அனல் கொண்டு, திருநங்கை என்ற காரணத்தால் விளையும் அத்தனை கேடுகளையும் சுட்டெரிக்கும் என்பது திண்ணம்.

**“ஒரு குடிப்பிறந்த பல்லோருள்ளும்**
**...................................................**
**கீழ்பால் ஒருவன் கற்பின்**
**மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே” (புறம், 183:5-10)**

ஒரு குடியில் பிறந்த மக்களுள் கீழ்நிலையிலுள்ள ஒருவன் கல்வி கற்றால் அவன் மேலானவனாக மதிக்கப்படுவான் என்று கல்வி கற்றதன் சிறப்பு கூறப்படுகிறது. கல்விக்கு என்றுமே சிறப்பு. கல்வி கற்றதனால் அம்மனிதனுக்கு பெருஞ்சிறப்பு என்பதை அறியமுடிகிறது.

திருநெல்வேலி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் பகுதியைச் சேர்ந்தவர் சுந்தரி சிவசுப்பு. மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்டவர். இதனால் உடல் உறுப்புகளின் இயக்கங்கள் முடங்கியதே தவிர கனவுகள் முடங்கவில்லை. சிகிச்சைக்காகச் சென்னைக்கு சென்ற போது இனி மேல் அவ்வளவு தான் சொந்த ஊருக்குச் செல்வோம் என்ற நிலையில் பேராசிரியர் ஒருவரை சந்தித்து விட்டு செல்லுமாறு நண்பர் கூறினார். அவரும் என்ன புதிதாக சொல்லிவிடப் போகிறார் என எண்ணிய போது ஐ.ஐ.டி யில் உயர் வேதியியல் துறையில் முனைவர் பட்டம் பெற்றிருந்த ஆர்.சந்திராவைப் பார்த்த போது என் எண்ணம் மாறியது அவரும் என்னைப்போல சக்கர நாற்காலியில் தான் தன் அன்றாட பணிகளைச் செய்து வந்தார். ‘‘சந்திரா மேடம் கொடுத்த ஊக்கம் தான் என் மீதே எனக்கு நம்பிக்கை பிறக்கச் செய்தது என்று கூறும் சுந்தரி, தொடர்பியல் துறையில் முதுகலைப் பட்டம் பெற்று தனியார் நிறுவனம் ஒன்றில் உயர் பொறுப்பில் உள்ளார். அவர்கூறும் போது ‘என்னால் நீண்ட நேரம் ஒரு பொருளைப் பிடிக்க முடியாது. என் உடல் நினைவாற்றலை இழந்து கொண்டிருக்கிறது என்னால் நடக்க முடியவில்லை. மற்றவர்கள் பேசுவதை சரியாகக் கேட்க முடிவதில்லை. லென்ஸ் இல்லாமல் பார்க்க முடிவதில்லை எனப் பல பிரச்சனைகள் இருந்தாலும் எதற்காகவும் நான் சோர்ந்து போவதில்லை’.

அசாத்தியமான விசயங்களை கனவு காணத் தொடங்கினேன். படிக்க வேண்டும்: வேலைக்குச் செல்ல வேண்டும்: மற்றவர்களுக்கு நம்பிக்கை அளிக்கும் நபராக நான் திகழ வேண்டும் என்று கண்ட கனவின் விளைவே சிறந்த பேச்சாளர் எழுத்தாளராக முடிந்தது என்று கூறுகிறார். தன் வாழ்க்கை அனுபவங்களைத் தொகுத்து எழுதிய “A Bumblebee’s Balcony – Celebrating Life With Cerebral Palsy” என்ற ஆங்கில நாவல் மூலம் சோர்ந்து போனவர்களுக்கு புதிய நம்பிக்கையை விதைக்கிறார் இவர். (பெண் இன்று, 04.0.2019இ ப.1) இவ்வளவு குறைகளும் அவள் உடலில் இருக்கும் போது, அவள் மனம் கொண்ட நம்பிக்கையின் விளைவே சிறந்த பேச்சாளர், எழுத்தாளர் என்ற அடையாளம். இதை அறியும் மனிதன் ஒவ்வொருவனும் உடல்குறைபாட்டை பொருட்படுத்தாது தன்நம்பிக்கையுடன் செயல்பட்டால் வெற்றியுள்ள வாழ்க்கை வாழலாம்.

**“மௌனத் திரை கிழித்து**
**வெளியே வா**
**மின்னலாய் ஒளிர்**
**மழையாய் பொழி**
**பிரளயமாய்ப் பெருக்கெடு”**

என்று கவிஞர் தேவமகள் பெண்ணின் இருப்பை உணர்த்துகிறார்.

**“பூமிக்கு வெளியே நிற்க இடம்தந்தால்**
**இந்த உலகை நெம்பிக் காட்டுவேன்”**

கவிஞர் மு.மேத்தா அவர்களின் கவி வரிகள் தன்னம்பிக்கையின் உச்சமாக காட்சியளிக்கிறது. தன்னம்பிக்கை இருந்தால் தரணியை ஆளலாம். தலைநிமிர்ந்து வாழலாம் என்பது இப்பெண்ணிடமிருந்து மனிதன் கற்றுக்கொள்ள வேண்டிய நற்பண்பாகும்.

**நிறைவுரை**

பெயர் வெளியிட விரும்பாத வாசகி துணிவிருந்தும் சூழ்நிலை நிகழ்வுகளை எதிர்க்க முடியாமல் திகைக்கிறாள். இச்சூழ்நிலைப் பெண்கள் ஒரு பிரிவினர். தன் வாழ்வின் உயர்வை மட்டும் சுயநலத்தோடு அணுகாது அரசியல் மூலம் சமுதாயத் தொண்டாற்றும் பெண்களும் உள்ளனர் என்பதற்கு எடுத்துக்காட்டு மஹிமா மொய்த்ரா. திருநங்கை என்ற கேலி கிண்டலை கல்வியால் சாதனையாக்கி நம்மை உணரவைக்கிறார் செவிலி ரக்ஷிகா ராஜ். அசாத்திய நிலையை சாத்தியமாக்கிய சுந்தரி சிவசுப்பு அனைத்து பெண்களுக்கும் ஒரு நம்பிக்கை நட்சத்திரம். 'வாழ நினைத்தால் வாழலாம் வழியா இல்லை இப்பூமியில்' என்பது போல் வாழும் வழி அறிய வேண்டும்.

**"உந்தித் தள்ளினும் எம்பிஎழும்**
**உருளைப்பந்து – நான்**
**வீழ்வேன் என்று நினைத்தாயோ!**
**சாகும் கடலில் வாழும் மீனாய்**
**துள்ளித்திரியும் டால்பின் - நான்**
**வீழ்வேன் என்று நினைத்தாயோ!"**

என்ற வரிகளுக்கேற்ப பெண்ணினம் எந்நிலையிலும் எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் வீழாது! ஏனென்றால் 'பெண்கள் வேரல்ல விதைகள்'. மண்ணுள் நசுக்கப்பட்ட விதையின் விளைவே புதுமுளை. பெண்ணும் வாழ்வில் நசுக்கப்பட்டே வெற்றியை அடைகிறாள் என்பதை இக்கட்டுரை புலப்படுத்துகிறது.

**துணைநின்ற நூல்கள்**

1. இந்து தமிழ்திசை நாளிதழ், (2019 பெண் இன்று பகுதிகள்)
2. முனைவர்.கு.வெ.பாலசுப்பிரமணியன் புறநானூறு, நியூசெஞ்சுரி புக்ஹவுஸ், முதல் பதிப்பு ஏப்ரல் 2004.
3. முனைவர்.து.செல்வலதா, தூவானம் தொடும் மனம் (கவிதைத் தொகுப்பு), ESS PEE பப்ளிகேசன்ஸ், அம்பாசமுத்திரம்.